முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1186

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.12.2022**, புதன்கிழமை

1. ஓங்கார சூட்சும ராஜனே
   ஓங்காரக்குடில் படைத்த அரசனே
   ஓங்காரனே ஓங்காரக்குடிலின் தலைவனே
   உயர்ஞானம்அருள கலியினில் அவதாரமெடுத்த தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
   ஆசிதனை சுபகிருது சிலை திங்களில்
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 13 ம் நாள் 28.12.2022, புதன்கிழமை)
   அரங்கனுக்கு பலங்கூட எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே கலியின் சிறந்தஞானி
   ஓங்காரக்குடிலின் ஆசானே
   குறைவின்றி அரங்கன் திருவடிபற்றினால்
   குவலயத்தார்க்கு அழியாமை உறுதிபட அமையக்கூடும்
4. கூடாத ஏவல் ஓமல் குவலயத்தை வாட்டுகின்ற மாயை சிக்கல்கள்
   அனைத்துமே அகன்றோடி ஈடேற்றம்
   அரங்கன்வழி இணைந்தால் போதும்
   இவ்வுலகமக்களுக்கு ஞானசித்தி உறுதியாகும்
5. ஆகவே அரங்கனை தொடர்ந்து
   அனுதினம் ஞானிகள் பூஜை செய்து
   ஜெகமெங்கும் தர்மம் நிரம்பும் வண்ணம்
   சித்தர்களை வேண்டி அன்னதானம் செய்துவர
6. வருகவே உலகினில் மாற்றம்
   வல்லமைபட அரங்கன் சக்தியாக வரங்கள் கூடி இனிதே
   பெருமைபட ஞான ஆட்சி
   பேருலகம் சடுதி காணக்கூடும்
7. கூடவேண்டி அற்புதத்தை
   குருஅரங்கன்வழி நடத்துகின்றேன்
   நாடெங்கிலும் அரங்கன் கிளைகள்
   ஞான கூடாரமாக தர்மசாலையாக நிரம்பவே
8. நிரம்பிட உலகமாற்றம் நிலைத்தன்மை கொண்ட மனிதர்கள் மூலமாக
   வரம்பிலா சக்திகள் பலவாறுகூடி
   வையகத்தில் ஞானஆட்சி
   ஞானிகள் ஆட்சியாக உதயமாகக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–